பொய் என்று சொன்னால்தான் அது நடவடிக்கைக் குறிப்பிலே ஏறக்கூடாது. பொய் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம். இல்லாவிட்டால் திருக்குறளை நீங்கள் ஒருநாள் சொல்ல முடியாமல் போய்விடும்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்ற அந்த வார்த்தையையே சொல்லமுடியாமல் போய்விடும்

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய் என்பது Parliamentary ward கிடையாது. உண்மைக்குப் புறம்பானது என்றுதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் சட்டத்தை தலைகீழாகப் படித்து வைத்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் தாமரைக்கனி அவர்கள் தெரிவித்த கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்னும் பதில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார், விட்டுவிடுங்கள்.

வினா எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

111—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

* *49*— **திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1996 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-50

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 100 ஆண்டுகளைக் கடந்த முனிசிபல் டவுனாக கடலூர் இருக்கிறது. அது இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரமாகும். மேலும், பாதாளச் சாக்கடை அமைத்தால் அதன் மூலமாகக் கழிவுநீர் செல்வதற்கான தக்க வழிவகைகளைக் கொண்டிருக்கின்ற ஒரு நகரமாகும். பாதாளச் சாக்கடை அமைப்பதற்காக 'இன்வெஸ்டிகேஷன்'-ஆய்வுப் பணி செய்வதற்காக நகர மன்றத்தின் மூலமாக சுமார் 8 1/2 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. எனவே அந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியின் மூலம் ரூ. 8,00,915 சென்ற மாதத்திற்கு முந்தைய மாதம் கட்டப்பட்டிருக்கிறது. ஆய்வுப் பணிகள் இனிமேல்தான் தொடங்கப்படவேண்டும். இன்னொரு முக்கியமான பிரச்சினை, பாதாளச் சாக்கடை என்பது நீண்ட காலத்திற்குப் பிறகு முடியக்கூடிய ஒரு திட்டமாகும். இதற்கு இத்தனை கோடி ரூபாய் செலவு ஆகும் என்று ஒவ்வொரு முறையும் அரசாங்கம் பதில் சொல்லி, புள்ளிவிவரங்களைக் காட்டினாலும் மக்கள் அதை நம்புகின்ற நிலையில் இல்லை. இதற்கிடையில் தேங்குகின்ற சாக்கடை நீரையும், மழை பெய்து வெள்ளம் ஏற்படுகிறபோது வரும் மழை நீரையும் அகற்றுவதற்கான தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று—பெரு நகரங்கள் ஆனாலும் சரி, சிறு நகரங்கள் ஆனாலும் சரி— சொல்லி, அவை அத்தனையையும் முழுமையாகப் பார்வையிட்டு ஆய்வு செய்யவேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத்தைப் பணித்திருக்கிறேன். அதை முதலில் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியும் விரைவாகத் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1996 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் பாதாளச் சாக்கடையிலிருந்து வெளியாகும் கழிவுநீர் கான்சாகிப் கால்வாயில் கலப்பதால், அங்கே இருக்கும் நீர் கால்நடைகள் குடிப்பதற்கு லாயக்கற்றதாகவும், பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடியதாக இல்லாமலும் இருக்கிறது. அந்தத் தண்ணீர் குளங்கள், குட்டைகள் போன்றவற்றுக்குச் செல்லுகின்ற போது அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. எனவே கழிவுநீர், வாய்க்காலில் கலக்காமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கடலூர் நகராட்சி பற்றியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

112—

கொசு மருந்து அடிக்கும் பணியாளர்கள் நியமனம்

** 849*—**திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் கூடுதலாகக் கொசு மருந்து அடிக்கும் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் சமயத்தில் நாங்கள் மக்களிடம் வாக்குக் கேட்கச் சென்றபோது, மக்கள் கொசுத் தொல்லையைப் பற்றி மிகவும் குறைபட்டுச் சொன்னார்கள். கோவையிலே இரண்டாவது பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுவதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுவதாலும்,